செ.வெ.எண்: 161 நாள்: 09.03.2021

**100 சதவீத வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

வாக்காளர் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன் அவர்கள் இன்று (09.03.2021) துவக்கி வைத்தார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021 வருகிற 06.04.2021 அன்று நடைபெறுவதையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்கு என்ற இலக்கை நோக்கி பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் இன்றையதினம் விளையாட்டு வீரர்கள், துணை இராணுவப்படையினர், காவல்துறையினர், நகராட்சி ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் என சுமார் 800-க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்திலிருந்து 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் கலந்துகொண்டனர்.

இந்த வாக்காளர் விழிப்புணர்வு தொடர் ஓட்டம் கீழராஜ வீதி, பிருந்தாவனம், வடக்குராஜ வீதி, மேலராஜ வீதி, சத்தியமூர்த்தி சாலை, ஜல்லிக்கட்டு சிலை, புதிய பேருந்து நிலையம் வழியாக மீண்டும் பொது அலுவலக வளாகத்தை வந்தடைந்தது.

வாக்காளர்கள் அனைவரும் எதிர்வரும் 06.04.2021 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது தங்களது வாக்குகளை தவறாமல் பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை கோட்டாட்சியர் டெய்சிகுமார், துணை ஆட்சியர் (பயிற்சி) சுகிதா, வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெயதேவ்ராஜ், முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி, நகராட்சி ஆணையர் (பொ) ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**